**Total No. of Pages: 3**

# 5713

Register Number:

Name of the Candidate:

## B.B.A. DEGREE EXAMINATION, May 2015

**(TAMIL MEDIUM)**

**(SECOND YEAR)**

**(PART – III)**

## 230: அடிப்படைக் கணக்குப்பதிவியல்

Time: Three hours　　　　Maximum: 100 marks

---

**பகுதி - அ**

**ஏதேனும் பத்து வினாக்களுக்கு சுருக்கமாக விடையளி** **(10 × 2 = 20)**

1. இரட்டைப்பதிவு முறை என்றால் என்ன?
2. வாராக்கடன் - குறிப்பு வரைக.
3. "இருப்புச் சோதனை" - இலக்கணம் தருக.
4. மாற்று உண்டியலைப் பண வசதி உண்டியலிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.
5. சரக்கிருப்பு எவ்விதம் மதிப்பிட வேண்டும்? ஏன்?
6. சரிகட்டுப்பதிவுகள் ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
7. முன்கூட்டிப் பெற்ற வருமானம் என்றால் என்ன?
8. துணை ஆதரவு ஏடுகள் பட்டியலிடுக.
9. நடைமுறைக் கணக்கு தயாரிப்பது எப்போது?
10. அனுப்பீடு - இலக்கணம் தருக.
11. சிவப்பு மை வட்டி என்றால் என்ன?
12. மாற்று உண்டியலை வரையறு.

**பகுதி - ஆ**

**ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளி** **(4 × 10 = 40)**

13. "இருப்பு சோதனை" எவ்வகைப் பிழைகளை வெளிப்படுத்தும்? வெளிப்படுத்தாது? விளக்குக.
14. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
15. சராசரி தவணை நாளினை கணக்கிடும் முறைகளை விவரி.
16. அனுப்பீடு வணிகத்தில் சாதாரண நட்டம் மற்றும் அசாதாரண நட்டம் என்றால் என்ன? அவை எவ்வாறு கையாளப்பட வேண்டும்?

17. தேய்மானம் எழுதுவதில் ஆண்டுமுறையை நிதிமுறையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

18. தீயில் அழிவுற்ற சரக்கினை மதிப்பிடும் முறையினை விவரி.

## பகுதி - இ

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி** **(2 × 20 = 40)**

19. கணக்கு ஏடுகள் பராமரிப்பு மற்றும் கணக்கியலுக்கான வேறுபாடுகள் யாவை?

20. வருவாய்-செலவு கணக்கை எழுதுவதிலுள்ள படி நிலைகளை விவரி. வருவாய் செலவுக் கணக்கின் இறுதி இருப்பு எதனை குறிக்கும்.

21. ராஜன் கம்பெனி ஆகஸ்ட் - 1, 2013 அன்று ரூ.4,70,000 மதிப்புள்ள பழைய இயந்திரம் ஒன்றை வாங்கி அதை நிறுவ ரூ.30,000 செலவழித்தது. ஆண்டு தோறும் தேய்மானம் 10% நேர்க்கோட்டு முறை நீக்கப்பட்டது. 2013, அக்டோபர் 31 அன்று அவ்வியந்திரம் பயனற்றுப் போனதால் ரூ.35,000க்கு விற்கப்பட்டது.

    ஆண்டு தோறும் மார்ச் - 31 அன்று கணக்குகள் முடிக்கப்பெறுகின்றன எனக்கொண்டு, இயந்திரக் கணக்கு மற்றும் தேய்மானம் கணக்கை மூன்று ஆண்டுகளுக்குத் தயார் செய்க.

22. 31.03.2013 அன்று திருமதி.குமுதாவின் ஏடுகளிலிருந்து எடுக்கப்பட்ட இருப்புகள் தரப்பட்டுள்ளன. இறுதிக்கணக்கு தயார் செய்க.

| பற்று இருப்புகள் | ரூ. | வரவு இருப்புகள் | ரூ. |
|---|---|---|---|
| அறைகலன் | 30,000 | முதல் | 2,00,000 |
| கை ரொக்கம் | 8,000 | கழிவு | 14,000 |
| தொடக்கச் சரக்கிருப்பு | 1,00,000 | விற்பனை | 6,00,000 |
| கொள் முதல் | 3,20,000 | பற்பல கடனீந்தோர் | 1,00,000 |
| முதலீடுகள் 10% | 20,000 | வட்டி | 1,500 |
| எடுப்புகள் | 60,000 | | |
| வாராக்கடன் | 12,000 | | |
| சம்பளம் | 60,000 | | |
| உள்தூக்கு கூலி | 20,000 | | |
| காப்பீடு | 12,000 | | |
| வாடகை | 26,000 | | |
| பற்பல கடனாளிகள் | 1,80,000 | | |
| விளம்பரம் | 40,000 | | |
| அச்சு, எழுதுபொருள் | 12,000 | | |
| பொதுச்செலவுகள் | 15,500 | | |
| | 9,15,500 | | 9,15,500 |

கீழ்க்காணும் சரிக்கட்டுதல்கள் செய்யப்பட வேண்டும்.

1. இறுதிச் சரக்கிருப்பின் மதிப்பு ரூ.80,000.
2. முதலீடுகள் மீது வட்டி ரூ.500.
3. முன் கூட்டிப்பெற்ற கழிவு ரூ.4,000.
4. பற்பல கடனாளிகள் மீது 15% வரா ஐயக்கடன் ஒதுக்கீடு உருவாக்குக.
5. பற்பல கடனீந்தோர் மீது 2% தள்ளுபடி ஒதுக்கீடு உருவாக்குக.

**&&&&&&&**